## வேளாண் நிதிநிலை அறிக்கை:

# விவசாயிகள் முதல்வரை மனதாரப் பாராட்டுகிறார்கள்!

## பேரவையில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதம்!



சென்னை, மார்ச் 22 - வேளாண் நிதிநிலை அறிக்கை கண்டு, விவசாயிகள் எல்லாம் முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறார்கள் என்று வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சட்டப்பேரவையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் கூறியதாவது:-

எதிர்க்கட்சியினர் எங்களை பாராட்டுவார்கள் என்று நாங்கள் எதிர்ப்பார்க்கவில்லை. விவசாயி கள் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைய தினம் முதலமைச்சர் அவர்களை பல்வேறு மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மனதாரா இப்போதுதான் பாராட்டிவிட்டுச் சென்றார்கள். அதனால் நீங்கள் பாராட்டுவீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

உங்கள் புதிய idea, புதிய கருத்துக்களைச் சொல்லி, இந்தத் திட்டத்தை கொண்டு வாருங்கள் என்று சொன்னால், அது ஆரோக்கியமாக இருக்கும். அந்தந்தப் பகுதிகளை சார்ந்த விவசாயிகளிடம் நாங்கள் கருத்து கேட்டோம். இந்த budgetஐ பொறுத்தவரை, நாங்கள் இங்கே Officeல் உட்கார்ந்து தயார் செய்யவில்லை. பல மாவட்டங்களுக்கு சென்று, பல விவசாயிகளை சந்தித்து அவர்களுடைய கருத்துகளை கேட்டு-அப்போது கருத்துகளை- நீங்கள் வரவில்லை, உங்களுக்கு கூறவும் தெரியாது. ஆக தெரிந்தாலும் சொல்லமாட்டீர்கள்.

அந்தந்த மாவட்டங்களின் கருத்துகளை உள்வாங்கி, தேவைக்கேற்ப, என்னென்ன தேவைகள் என்பதை அறிந்துதான் இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் தயார் செய்திருக்கிறோம். அதன் அடிப்படையில் மக்கள் வாழ்த்துகிறார்கள். அவர்கள் கூறிய கருத்துகளை, இப்போது திட்டமாக அறிவித்திருக்கின்றீர்கள் என்று முதலமைச்சர் அவர்களை நேரடியாக சந்தித்து இப்போது வாழ்த்து தெரிவித்தார்கள். உறுப்பினர் சோளத்தைப் பற்றி சொல்கிறார்.

இந்த ஆட்சியில் சோளத்தின் உற்பத்தியை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, கடந்த ஆண்டு முதல் அதற்கு தீவிரமாக நிதி ஒதுக்கீடு செய்து, அதனுடைய பரப்பளவை உயர்த்தியிருக்கின்றோம். ஆக, இந்த ஆண்டும்கூட, சோளத்திற்கு என்று தனியாகநீங்கள் நிதிநிலை அறிக்கை படித்துப் பார்த்தால் தெரியும் அதற்கான திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். நன்றாகப் படித்து, நன்றாகச் சொல்லுங்கள். பாராட்டுவதற்கு மனது இல்லையென்றாலும், அதை என்ன செய்யவேண்டுமென்ற நல்ல கருத்துகளை, ஆரோக்கியமான கருத்துகளைக் கூறினால் நாங்கள் ஏற்க தயாராக இருக்கின்றோம்.

பாதிப்பு என்று கேள்வி பட்டவுடன், அதற்குரிய நஷ்ட ஈட்டையும் வழங்கிய அரசு, நம்முடைய முதல்வர் அரசு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஏ.பி.ஜெயசங்கரன்:** Tractor அனைத்து இடத்திலேயும் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் கொடுக்கப்படுகிறது. இப்போது எங்கள் ஊர் பகுதியில் அந்த tractor அனைத்தும் repair ஆகி நிற்கிறது. விவசாயிகளுக்கு எந்தப் பலனும் இல்லை. இப்போது தனியாரிடம் சென்று அவர்கள் வாடகை எடுத்து ஓட்டுகிறார்கள்.

**அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** அது உங்கள் ஆட்சிக் காலத்தில் வாங்கின tractor ஆக இருக்கும். புதியதாக tractor வாங்கி அது உடனே repair ஆகாது. அது கடந்த உங்கள் ஆட்சி காலத்தில் வாங்கியிருப்பார்கள். அந்த tractorம் machine தானே. அது வாங்கி நாளாகியிருக்கும், repair ஆகியிருக்கும். அது ஒரு குற்றமா? உங்கள் ஊரில் நடந்ததையெல்லாம், பொத்தாம் பொதுவாக சொல்லக்கூடாது.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

## கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு

# 5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கூடுதலாக கொள்முதல்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!



சென்னை, மார்ச் 22 - இந்த ஆண்டு கடந்த ஆண்டை விட 5 லட்சம் மெட்ரிக் டன் நெல் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று உணவுத் துறை அமைச்சர் அர. சக்கரபாணி குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் கூறியதாவது:

கடந்த ஆட்சியில், நெல் quintal-க்கு 1,960 ரூபாய்தான் வழங்கப்பட்டது. முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு, 10 ஆண்டுகளாக உங்களுடைய ஆட்சியில் நெல்லுக்கான ஆதார விலை கொடுக்கப்படவில்லை. முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், சன்ன ரகத்திற்கு 130 ரூபாயும், அதேபோல் பொது ரகத்திற்கு 107 ரூபாயும் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல் கடந்த செப்டம்பர் ஒன்றாம் தேதி முதல் நெல் குவிண்டாலுக்கு, சன்ன ரகத்திற்கு ரூ.2,450/-ம், அதேபோல் பொது ரகத்திற்கு ரூ.2,405/-ம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு, கடந்த ஆண்டைவிட ஐந்து இலட்சம் மெட்ரிக் டன் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்ல வேண்டாம். எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டும். அது ஏன் திறக்கப்படவில்லை என்ற காரணத்தைச் சொன்னால், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலே சொல்லி உடனடியாக அதை திறப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

விவசாயிகளினுடைய நலன் பாதுகாக்கப்படும். விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையிலே நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## மாணவர்கள் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை

# எந்தப் பள்ளியில் படித்தாலும் கட்டாயமாக தமிழ் படிக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விளக்கம்!



சென்னை, மார்ச் 22 - தமிழ்நாட்டில் மாணவர்கள் 1-ஆம் வகுப்பு முதல் 10-ஆம் வகுப்பு வரை எந்தப் பள்ளியில் படித்தாலும் கட்டாயமாகத் தமிழைப் படிக்க வேண்டும் எனும் கட்டமைப்பைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று, சட்டப்பேரவையில் நேற்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டார்.

சட்டப்பேரவை விவாதத்தின் போது குறுக்கிட்டு அவர் அளித்த விளக்கம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய காலத்தில்தான் The Tamil Nadu Tamil Learning Act 2009 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதேமாதிரி 2014ல் State Board மற்ற எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் தமிழ் என்பது கட்டாயப்படுத்தப் படும் என்ற அரசாணை எண் 145 வந்திருக்கிறது. அதை நடைமுறைப்படுத்துகின்ற வகையில் தங்கம் தென்னரசு அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

2014-2015-ஆம் ஆண்டில் 1 ஆம் வகுப்பு மற்றும் 2 ஆம் வகுப்பு, அடுத்த கல்வியாண்டில் 6 ஆம் வகுப்பு, 7 ஆம் வகுப்பு இப்படி தொடர்ந்து 2025-ஆம் ஆண்டு 1 ஆம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள் எந்தப் பள்ளியில் படித்தாலும் கட்டாயமாகத் தமிழைப் படித்தாக வேண்டும் என்கிற ஒரு கட்டமைப்பை கொண்டு வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்லாமல் CBSEயைச் சார்ந்திருக்கிற தமிழ் ஆசிரியர்களை மட்டும் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தனியாக ஒரு refresher course புத்தாக்கப் பயிற்சியையும் பள்ளிக் கல்வித் துறை வழங்கியிருக்கிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

## கழக ஆட்சியில் – டெக்ஸ்டைல் தொழில் நுட்பத்துடன்

# திருப்பூர் - தூத்துக்குடி - விருதுநகரில் மிகப் பெரும் டெக்ஸ்டைல்ஸ் தொழில் நுட்பப் பூங்கா திட்டங்கள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பெருமிதம்!



சென்னை, மார்ச் 22 - டெக்ஸ்டைல் தொழில் நுட்பத்துக்கு நிரந்தரத் திட்டம் உருவாக்கி - திருப்பூர், தூத்துக்குடி, விருதுநகரில் மிகப் பெரும் தொழில் நுட்பப் பூங்காத் திட்டங்கள் கொண்டு வந்துள்ளோம் என தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேசியதாவது: -

திராவிட நாயகன் அவர்களைப் பொறுத்தவரை, தொழில் வளர்ச்சியில் அவர் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளாரோ, அதற்கு நிகராக, அதைவிட அதிகமாக என்றுதான் சொல்ல வேண்டும், தொழிலாளர் நலனில் அவர் அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

**சாம்சங் பிரச்சினை**

சாம்சங் நிறுவனத்தின் பிரச்சினையைப் பொறுத்தவரை, இரு தரப்பினரிடமும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி, ஒரே ஒரு Ministry-ல் என்று மட்டுமில்லாமல், பொதுப் பணித் துறை அமைச்சர், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் என்னையும் அழைத்து, நான்கு அமைச்சர்களிடமும் ‘நீங்கள் எல்லோரும் சேர்ந்து இரு தரப்பினருடனும் பேசி, ஒரு நல்ல முடிவைக் கொண்டுவர வேண்டும்’ என்று சொன்னார். உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும், அது ஒரு மிகப்பெரிய நிறுவனம். அதுவும் Korean நிறுவனம். அவர்களுடன் பேசும்பொழுது, மொழிப் பிரச்சினை உள்ளிட்ட அனைத்துக் காரணிகளையும் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அந்நிறுவனத்தில் இங்கு இருக்கக்கூடிய HR ஒன்று சொல்கிறார்கள்; Workers side-ல் இருந்து ஒரு information வருகிறது; அதைத் தாண்டி, CITU சங்கத்தினரும் அவர்கள் தரப்பு செய்திகளையெல்லாம் கூறி--, அதில் உடனே எடுத்தோம் கவிழ்த்தோம் என்று ஒரு முடிவை எடுக்க முடியாது. நல்ல முறையில் பேச்சுவார்த்தை நடத்தியபிறகு, 10 நாட்களுக்குப் பிறகு அப்பிரச்சினை தீர்வுக்குக் கொண்டுவரப்பட்டது. மீண்டும் அடுத்த கட்டமாக வந்த பிரச்சினை என்பது வேறு பிரச்சினை. அது வேறு ஒரு HR issue-க்காக வந்தது. அதுவும் அரசினால் சரியாகக் கையாளப்பட்டு, அந்தப் பிரச்சினையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

In fact, நாங்கள் சாம்சங் நிறுவனத்திடமும் சரி, அதேபோல Ambassador-இடமும் சரி, பல தரப்பிலும் இது தொடர்பான கருத்துக்கள் கொண்டுபோய் சேர்க்கப்பட்டு, update செய்யப்பட்டு, இன்று இந்திய அளவில் Korean companies அதிக அளவில் இருக்கின்றன என்றால் அது தமிழ்நாட்டில்தான். அதேபோல, Japanese companies அதிகமாக இருக்கின்றன என்றால் அது தமிழ்நாட்டில்தான். இவ்வாறு, தொடர்ந்து நான் அனைத்து வெளிநாட்டுத் தரப்பு முதலீடுகளையும் சொல்ல முடியும்.

IT park பற்றி சொன்னீர்கள். எந்த IT park என்று சொல்லவில்லை. நாமக்கல் பகுதியில்--. நீங்கள் எந்த IT park என்று சொல்லவில்லை. IT park-ல் ஏதோ ஒரு issue என்று சொல்லியிருந்தார்கள். அந்த எந்த issue ஆக இருந்தாலும், அதுகுறித்து எழுதிக் கொடுத்தால் அதற்கான பணியை நான் நிச்சயமாக-- (குறுக்கீடு). சேலம் IT park-ல் ஏற்கெனவே அனைத்தும் உள்ளே கொண்டு செல்லப்பட்டு-- நிறுவனம் திறக்கப்பட்டு--. நான் இரண்டு முறை அங்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்திருக்கிறேன். நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. சேலம் IT park அருகிலேயே, நீங்கள் சொன்ன அந்த textile issue-விற்காகவும் மிகப்பெரிய அளவில், 110 ஏக்கர் நிலத்தை எடுத்து, கடந்த பிப்ரவரி மாதம் Integrated Textile Park-க்கான நிலத்தையும் அந்த நிறுவனத்தி ற்கு எடுத்துக் கொடுத்த மாபெரும் முதலமைச்ச ரான திராவிட நாயகன் அவர்கள் ஆட்சியில் தான் சேலத்தில் அங்கங்கே வெளிவந்த கழிவுகளை எல்லாம் எடுத்து, ஒரே இடத்தில் கொண்டுவந்து, ETP அமைத்து, அனைத்து நிறுவனங்களை யும் கொண்டு வந்து சேர்க்கும் அந்தப் பணியையும் இந்த திராவிட நாயகன் அவர்களின் ஆட்சி தான் நிறைவு செய்திருக்கிறது.

**தொழில் வளர்ச்சிக்கு மின் தேவை!**

அதேபோல, energy-க்கும், industry-ன் வளர்ச்சிக்கும் correlation இல்லையா என்று கேட்டீர்கள். Energy Minister அவர்களும் இதுகுறித்துச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து சாதனை புரிந்துவரும் நம்முடைய Energy Department, படிப்படியாக energy demand increase ஆகிக் கொண்டே செல்வதைக் கருத்தில்கொண்டு, எல்லா இடங்களிலும் தேவையான அளவிற்கு energy supply செய்துகொண்டுதான் இருக்கிறது. ஒன்றே ஒன்று சொல்லவேண்டும். தொழில் வளர்ச்சி அதிகமாக இருப்பதனால், மின் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று நாங்கள் அப்போது சொன்னபோது, ‘இல்லவே இல்லை, அதற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை’ என்று நீங்கள் சொன்னீர்கள். இப்போது நீங்கள் தொழில் வளர்ச்சிக்கு மின் தேவை இருக்கிறது என்பதை ஒப்புக் கொண்டுள்ளீர்கள். எனவே, அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) தொழில் துறையைப் பொறுத்தவரை, எங்கெங்கிருந்து மின்சாரம் வருகிறது என்றால், Central Grid-ல் இருந்து எடுக்கிறோம், solar எல்லா இடத்திலும் போடுகிறார்கள். எனவே, எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ, அப்பகுதிகளில் உள்ள அந்தந்த நிறுவனங்களே energy தேவையைப் பார்த்துக்கொள்கின்றன.

Textile துறையைப் பற்றிப் பேசினீர்கள். கோவை, திருப்பூர் பகுதிகளில், textile தொழிலில் மிகப்பெரிய அளவிற்கு பிரச்சினையாக இருப்பது cotton தட்டுப்பாடு. உங்களுக்கே நன்றாகத் தெரியும். Cotton விலை உயர்ந்ததால், ஒன்றிய அரசாங்கம் அதனை சரியாக கையாளாத காரணத்தினால், இந்தப் பிரச்சினை அங்கு ஏற்பட்டது. திராவிட நாயகன் அவர்களின் ஆட்சியில்தான் textile தொழிலில், மிகப் பிரம்மாண்டமான ஒரு பாய்ச்சலுக்கு திருப்பூரை தயார் செய்யும் அளவிற்கு technical textiles-க்கு ஒரு fixed policy-ஐ உருவாக்கி, அடுத்தகட்டமாக technical textiles-க்கு தூத்துக்குடியிலும் ஒரு மிகப்பெரிய Park-ஐ உருவாக்கி, textile துறையில்--. அதேபோன்று, PM MITRA park. விருதுநகரில் PM MITRA park என்ற ஒரு திட்ட த்தையும் கொண்டுவந்துள்ளோம்.

Industry ஏ ஆரம்பிக்கப்படாதது போன்று create செய்யக்கூடாதல்லவா! அதே போன்று, incentives கொடுக்கப்படும்போது, GST-ஐ கணக்கீடு செய்ய முடியவில்லை என்று இறுதியாகக் கூறினார்கள். அதுவொரு valid point. அதுகுறித்து நாங்கள் பேசிக் கொண்டி ருக்கிறோம். அதற்காக incentive கொடுப்பதால், எந்த வருமானமும் நமக்கு வரவில்லை என்று கூறுவது தவறானது. ஏனெனில், பெரும் அளவில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதுவும், பரவலாக்கப்பட்ட வளர்ச்சியை உறுதி செய்யும்போது, அனைத்துத் தரப்பு கிராமப்புற மக்களுக்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கும்போது, ஆங்காங்கே local economy boom ஆகிறது. Local economy boom ஆனால்தான் திராவிட நாயகன் அவர்களின் one trillion dollar economy என்ற இலக்கை நோக்கி நாம் செல்ல முடியும்.

ஆகவே, incentives கொடுப்பதைப் பொறுத்தவரையில், திராவிட நாயகன் அவர்களுடைய அரசு தீர விசாரித்துதான் கொடுக்கிறது; அவ்வாறு கொடுப்பதால் வேலைவாய்ப்புகள் உருவாகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள், GST issue குறித்து GST Council-ல் நிச்சயமாகப் பேசுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

இவ்வாறு அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.




உதகை நகர திமுக சார்பில் கழகத் தலைவர், முதல்வர் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழா மற்றும் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நகர செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில் ஆர். இளங்கோவன் வரவேற்பில் நடைபெற்றது. இதில் கந்திலி கரிகாலன், மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜு, ஆர்.பி.பரமேஷ் குமார், கே. போஜன், ஜே. ரவிக்குமார், எ. நாசர் அலி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## பால் நுகர்வோரும் ஏழை! உற்பத்தியாளரும் ஏழை! எனவே

# தி.மு.க. அரசு பால் விலையை ஏற்றாது!

## அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் உறுதி!



சென்னை, மார்ச் 22 - சட்டப்பேரவை விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், “கழக அரசு பால் விலையை ஏற்றாது” என உறுதிபடக் குறிப்பிட்டார்.

சட்டப்பேரவையில் அவர் கூறியதாவது:-

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 11 இலட்சம் லிட்டர் அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய consumerம் ஏழை, உற்பத்தியாளரும் ஏழை. நீங்கள் 50 ரூபாய்க்கு அதிகப்படுத்த வேண்டுமென்று சொல்கிறீர்கள். மூன்று ரூபாய் குறைத்திருக்கிறோம். அதற்குப் பதிலாக நம் அரசாங்கத்திடமிருந்து பணம் கொடுக்கிறோம். தற்போது 143 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார். அடுத்தடுத்தும் பணம் கொடுக்கப்போகிறார். மூன்று ரூபாயை நம் அரசாங்கத்திடமிருந்து கொடுக்கிறோம். 1 packet பால் விற்கப்பட்டால் இரண்டு ரூபாய்தான் commission. நாம் 40 ரூபாய்க்கு கொடுக்கிறோம். Private, Arokya பால், Heritage இவையெல்லாம் சுமார் 56 ரூபாய்க்கு வெளியில் விற்கிறார்கள். நம்மிடம் வாங்குபவரும் ஏழை, உற்பத்தி செய்பவரும் ஏழை. 50 ரூபாய் கூட்ட வேண்டும் என்று சொல்வதை, நீங்கள் நன்றாகப் பதிவு செய்யுங்கள். எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை, நாங்கள் விலையை ஏற்றமாட்டோம். இரண்டு பேரும் ஏழையாக இருப்பதால் நிச்சயமாக விலையை ஏற்றமாட்டோம்.

இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

# புதுக்கோட்டை-ஆதனப்பட்டியில் ஜல்லிக்கட்டு!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, மார்ச் 22 - அன்னவாசல் அருகே உள்ள ஆதனப்பட்டியில் உள்ள ஆகாசகருப்பர் அய்யனார் கோயில் பங்குனி திருவிழாவையொட்டி ஜல்லிகட்டு நடைபெற்றது. இதில்720 காளைகளும் 250 மாடு பிடி வீரர்களும் பங்கேற்றனர்.

அன்னவாசல் அருகே உள்ள ஆதனப்பட்டியில் இப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆகாசகருப்பர் அய்யனார் கோயில் உள்ளது. இக்கோயிலில் ஆண்டு தோறும் பங்குனி திருவிழாவையொட்டி நடைபெறும் ஜல்லிக்கட்டு நடைபெற்றது.

போட்டியை இலுப்பூர் கோட்டாட்சியர் அக்பர் அலி. புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

விராலிமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் மு.பி.ம.சத்தியசீலன், குண்றாண்டார் கோயில் முன்னாள் சேர்மன் கே.ஆர். என்.போஸ் ஆகியோர் பங்கேற்றனர். முதலில் கோயில் காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. காலையில் 8.00 மணிக்கு துவங்கிய இந்த ஜல்லிக்கட்டு மதியம் 3.00 மணி வரை நடைபெற்றது.

இலுப்பூர் டிஎஸ்பி முத்தராஜா, இலுப்பூர் தாசில்தார் காமராஜ் ஆகியோர் ஜல்லிக்கட்டை கண்காணித்தனர். இதில் திருச்சி, புதுக்கோட்டை தஞ்சாவூர் மற்றும் கீரனூர் சுற்று புறப் பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட 720 காளைகள் வாடிவாசலில் அவிழ்த்து விடப்பட்டன. இதில் மருத்துவ அலுவலர்கள் பரிசோதனைக்கு பின் கோயில் காளைகள் அவிழ்த்து விட பட்டன.

காலையில் 8.00 மணிக்கு துவங்கிய இந்த ஜல்லிக்கட்டு மதியம் 3.00 மணி வரை நடைபெற்றது. இலுப்பூர் டி.எஸ்.பி. முத்தராஜா, இலுப்பூர் தாசில்தார் காமராஜ் ஆகியோர் ஜல்லிக்கட்டை கண்காணித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கீரை ஆ. தமிழ்ச்செல்வன்

### மார்ச் 22 (1997)



புதுக்கோட்டை மாவட்டக் கழக துணைச் செயலாளராகவும் – குன்றாண்டார்கோவில் ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

மாவட்ட ஊராட்சி துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“கடுமையான சோதனைகள், கொடிய அடக்குமுறைகள், கழகத்தை தாக்கியபோதெல்லாம் அந்தக் கழகக் காளை நெஞ்சுயர்த்தி நிமிர்ந்து நின்று இந்த இயக்கத்தைக் காத்து நின்ற காட்சியை எண்ணிப் பார்க்கிறேன். தனது கனிவான நடைமுறையினால் கழக உடன்பிறப்புக்களைக் கவர்ந்து நின்ற பாங்கினை நினைத்துப் பார்க்கிறேன்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**